# KUPASAN MUTU JAWAPAN

## BAHASA TAMIL 2
## 6354/2

## SPM
## 2014

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

## INSTRUMEN PENTAKSIRAN

| | | |
|---|---|---|
| Kod | : | 6354/2 |
| Markah | : | 100 |
| Masa | : | 2 jam 15 minit |

## REKA BENTUK INSTRUMEN PENTAKSIRAN

Kertas 2 mengandungi empat bahagian. Calon perlu menjawab semua soalan.

| | | |
|---|---|---|
| Bahagian 1 | : | Pemahaman Petikan Kecil dan Prosa Moden |
| Bahagian 2 | : | Pemahaman Petikan Cerpen dan Puisi Klasik |
| Bahagian 3 | : | Peribahasa dan *Ceyyul* |
| Bahagian 4 | : | Pengetahuan dan Kemahiran Bahasa (Fonologi, Morfologi, Sintaksis dan Tatabahasa). |

## PRESTASI KESELURUHAN

Calon mempamerkan prestasi yang memuaskan. Namun, sebilangan besar calon tidak mempunyai kemahiran yang mencukupi untuk menjawab soalan memprosakan puisi dan *mozhianigal*. Tambahan pula, pemahaman pelajar terhadap petikan tertentu juga kurang memuaskan. Masih terdapat segelintir calon gagal mengaplikasikan teknik menjawab yang tepat.

## PRESTASI MENGIKUT KUMPULAN CALON

### Kumpulan Tinggi

Calon dalam kumpulan aras tinggi berjaya memahami keperluan soalan dan menjawab secara tepat. Mereka juga dapat mengaplikasikan teknik menjawab dengan tepat. Jawapan calon menunjukkan calon mempunyai pengetahuan am dan dapat menerangkan idea dengan jelas dan mudah difahami.

### Kumpulan Sederhana

Calon kumpulan sederhana berjaya menguasai kemahiran asas bahasa tetapi kurang memahami teknik menjawab yang tepat. Kematangan idea calon kurang bernas dan relevan. Ini menunjukkan tahap pembacaan calon masih ditahap yang rendah.


### Kumpulan Rendah

Calon kumpulan rendah menunjukkan mutu jawapan yang amat rendah. Kumpulan ini tidak memahami kehendak soalan disebabkan penguasaan kemahiran bahasa yang amat rendah. Jawapan calon tidak menepati kehendak soalan. Penguasaan teknik menjawab oleh kumpulan calon ini amat lemah. Keupayaan calon untuk memahami dan mentafsir petikan dan grafik kurang memuaskan.

## PRESTASI TERPERINCI

### Soalan 1.

1 கீழ்க்காணும் கருத்துப்படம் வலியுறுத்தும் **செய்தி** யாது?.




[நன்றி: செம்பருத்தி]
- எடுத்தாளப்பட்டது

Calon dikehendaki menganalisis dan meneliti mesej yang tersirat dalam gambar di atas Calon perlu peka dengan maksud tersirat yang terkandung dalam gambar ini.

1. இன்றைய இளைஞர்கள் சுதந்திரமாக வாழ எண்ணினாலும் சமயம், கலாச்சாரம், பண்பாடு போன்ற கட்டுப்பாடுகள் தடையாக இருக்கின்றன.

Jawapan di atas mempamerkan mutu jawapan yang cemerlang. Sebahagian besar calon tidak dapat mengenalpasti mesej tersirat yang terdapat di dalam gambar.

## Soalan 2

**2** கீழ்க்காணும் கடிதம் உணர்த்தவரும் **இரண்டு** கருத்துகளை எழுதுக.



அன்புள்ள மகனே!
நலமா?..........
அன்று உன் விரல்பிடித்து நடக்கச் செய்த
அதே ஸ்பரிசத்தோடே
இன்று *பேனா* பிடித்து எழுதுகிறேன்!

இந்தக் கடிதத்தை உன் மகனுக்குத் தெரியாமல்
படி...
நீயும் பிற்காலத்தில் இப்படி எழுதாமலிருக்க!

உன்னைச் சபிப்பதோ
என் துயரங்களைச் சொல்வதோ
இந்தக் கடிதத்தின் நோக்கமல்ல

உன் தாய் என்றுகூட பாராபட்சம் பார்க்காமல்
என் கடைசி ஆசையைத் தெரிவிப்பதே!
நான் இறந்தபிறகு கொல்லியைத்
தலையில் வைக்காதே வயிற்றில் வை!
என் உடலிலே முதலில் எரியப்போகும் உறுப்பு
உன்னைச் சுமந்த
இந்தக் கருப்பையாகத்தான் இருக்க வேண்டும்!

ஏனென்றால்,

நீ பால் வார்க்கக் கொடுத்து வைக்காத வயிறு
தீ வைக்கவாவது கொடுத்து வைக்கட்டும்!

மகனே! பெத்தமனம் பித்து என்பதற்குச் சான்றாய்
என் கடைசி வரி...
உன் வீட்டு உணவுதான் எனக்கில்லை
என்றாகிவிட்டது!
ஒருவேளை நீ இந்தக் கடிதத்திற்குப்
பதில் போட்டால்
அஞ்சல் தலையை எச்சிலால் அல்ல!
ஒரே ஒரு சோற்றுப் பருக்கையால் ஒட்டி அனுப்பு!

இப்படிக்கு,
*வயதான ஒரு குழந்தை!*
அநாதை இல்லத்திலிருந்து

Soalan ini berdasarkan surat kiriman yang memerlukan para calon mengenali maksud tersirat yang berunsurkan pengajaran. Calon perlu mempunyai kemahiran berfikir aras tinggi (KBAT) untuk menjawab soalan ini.

2. i. தாயை வயதான காலத்தில் அரவணைத்து அன்பாக கவனித்துக் கொள்ள வேண்டும்.
ii. பெற்றவர்களின் மனம் கலங்க வைக்க கூடாது.


Jawapan di atas merupakan jawapan yang cemerlang kerana calon telah berjaya mengemukakan aspek maksud tersirat berbentuk pengajaran yang terdapat dalam teks surat kiriman yang diberikan. Kebanyakan calon telah berjaya mengenali dan memahami maksud tersirat berunsurkan pengajaran yang terdapat dalam petikan yang diberikan.

**Soalan 3**

3 கீழ்க்காணும் பகுதியின்வழி பஞ்ச் குணாளனின் **இரண்டு சாதனைகளை** எழுதுக.

## பூப்பந்து உலகின் சகாப்தம்

### டத்தோ பஞ்ச் குணாளன்



விளையாட்டுத் துறையில் மலேசியாவின் பெயரை உலக நாடுகளில் ஓங்கச் செய்தவர்களுள் மறைந்த பஞ்ச் குணாளன் இன்றளவும் போற்றப்படும் மனிதராக வாழ்கிறார். சிப்பாங்கில் 1944ஆம் ஆண்டு பிறந்த இவர், ஆசிய பூப்பந்துப் போட்டியிலும், தோமஸ் கிண்ணப் போட்டியிலும் மலேசியா என்ற நாடு உலக வரைபடத்தில் இருப்பதை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியவர். 1970ஆம் ஆண்டுகளில் மலேசியா, பூப்பந்து விளையாட்டில் திறமை குறைந்திருந்த சமயத்தில், விடிவெள்ளியாகத் தோன்றி தமது நண்பர் இங் பூன் பீ என்பவருடன் சேர்ந்து தங்களின் விளையாட்டு எதிரிகளான இந்தோனேசியாவின் விளையாட்டாளர்களை மண்ணைக் கௌவச் செய்தார். காமன்வெல்த் பூப்பந்துப் போட்டி, ஆசிய இளையோர் பூப்பந்துப் போட்டி, அமெரிக்கப் பொதுப் பூப்பந்து இரட்டையர் போட்டி, டென்மார்க்குப் பொதுப் பூப்பந்துப் போட்டி, கனடா இரட்டையர் போட்டி ஆகிய போட்டிகளில் பங்கேற்றுத் தங்கம் வென்று நாட்டுக்குப் பெருமை சேர்த்தார். அதோடு, 1992ஆம் ஆண்டு நாட்டின் பூப்பந்துக் குழுவுக்கு இவர் தலைமையேற்றபோதுதான் தோமஸ் கிண்ணத்தை நம் நாடு வென்றது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், பிரிட்டிஷ் ராணியிடமிருந்து ஒலிம்பிக் தீபத்தைப் பெற்ற மலேசியர் என்ற பெருமை இவருக்கு உண்டு. அதோடு, மலேசிய அரசு இவரின் திருவுருவம் பதித்த 5 ரிங்கிட் தபால் தலையையும் வெளியிட்டுச் சிறப்பித்திருக்கிறது.

Calon dikehendaki membaca, meneliti dan menghayati sumbangan dan kejayaan tokoh yang dibicarakan dalam petikan. Kebanyakan calon dapat memahami teks mengenai tokoh dan sumbangannya. Oleh yang demikian, majoriti calon dapat memberikan seperti yang diberikan.

3. i. காமன்வெல்த் பூப்பந்துப் போட்டி, ஆசிய இளையோர் பூப்பந்துப் போட்டி, அமெரிக்கப் பொதுப் பூப்பந்து இரட்டையர் போட்டி, டென்மார்க்குப் பொதுப் பூப்பந்துப் போட்டி, கனடா இரட்டையர் போட்டி ஆகிய போட்டிகளில் பங்கேற்றுத் தங்கம் வென்றார்.


ii. 1992ஆம் ஆண்டு நாட்டின் பூப்பந்துக் குழுவுக்கு இவர் தலைமையேற்றபோதுதான் தோமஸ் கிண்ணத்தை நம் நாடு வென்றது.

Jawapan di atas merupakan jawapan yang cemerlang kerana calon berjaya mengenal pasti dan menyenaraikan kejayaan tokoh dengan tepat.

**Soalan 4**

4 கீழ்க்காணும் உரைவீச்சு, இளைஞர்களுக்குக் கூறவரும் **அறிவுரை** யாது?

ஒற்றைக் காலில்
நின்றுதான்
ஒளி கொடுக்கிறது
மெழுகுவர்த்தி !
இளைஞனே !
இரண்டு காலிருந்தும்
இன்னும்
இருளில் கிடப்பதேன்?



– கே.எல். இந்திரா

Soalan ini berdasarkan puisi moden. Kebanyakan calon kurang memahami puisi tersebut. Calon juga kurang mahir dalam teknik menjawab soalan ini. Oleh itu, kebanyakan calon tidak dapat menjawab soalan ini dengan baik.

(4) ஒரே காலில் நின்று நமக்கெல்லாம் ஒளி தருகிறது மெழுகுவர்த்தி.
ஆனால் இளைஞர்களோ இரண்டு ~~காலில்~~ கால் இருந்தும் ஏன்
இன்னும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.


Majoriti calon gagal memahami maksud tersirat puisi ini. Akibatnya, calon hanya memberikan maksud tersurat sahaja seperti jawapan di atas.

(4) மனிதனைவிட தோற்றத்தில் குறையிருக்கும் மெழுகுவர்த்தி
கூட அனைவருக்கும் பயன்படுவதைப்போல, எந்த குறையுமின்றி
இருக்கும் இளைஞர்கள் வாழ்வின் இருளை விட்டு
முன்னேறு வதற்கு வெற்றிப்படிகளைப் போட வேண்டும்.

Jawapan di atas merupakan contoh jawapan yang baik kerana dapat mengenali dan memahami mesej yang ingin disampaikan oleh penyajak.

## Soalan 5

**5** கீழ்க்காணும் துணுக்கில் விவசாயி **கூறவருவது** யாது?




Calon memerlukan pemahaman yang mendalam supaya dapat menjawab soalan berbentuk komik,  Calon perlu menaakul maksud tersirat dalam perbualan komik yang diberikan.

(5) விவசாயி தனக்கு ஒரு முறை வங்கியில் கடன் கொடுத்து
விட்டால் மீண்டும் வங்கிக்கு வந்து தொந்தரவு செய்ய
மாட்டேன் என்கிறார். ~~இது~~ இருப்பினும், வேறொரு கோணத்தில்
பார்த்தால் அவர் கடனைச் செலுத்தவும் மீண்டும்
வங்கிக்கு வரமாட்டார் என்று சொல்வது போலும் இருக்கிறது.

Mutu jawapan yang cemerlang. Soalan djawab dengan baik kerana berjaya mengenali dan memahami isi tersirat dalam komik ini.  Sementara calon sederhana hanya dapat menulis fakta tersurat sahaja.

**Soalan 6**

6 கீழ்க்காணும் கூற்றில் இசைஞானி இளையராஜாவின் **இரண்டு எதிர்ப்பார்ப்புகளை** எழுதுக.

**இசை என்னும் நெருப்பில் தண்ணீர் தெளிக்கிறார்கள்!**



இன்று புதிய படங்களுக்கு இசையமைக்கக் கேட்டுவரும் யாரும் புது மாதிரியான இசை வேண்டும் என வருவதில்லை. வெளிநாட்டுப் படங்களைப் பார்த்துவிட்டு அந்த மாதிரி வேண்டும், இந்த மாதிரி வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள். புதிய சிந்தனை உள்ளவர்கள் யார் இருக்கிறார்கள்? இசை நெருப்பில் தண்ணீர் தெளிக்கத்தான் ஆள் இருக்கிறார்களே தவிர, அதைத் தூண்டிவிட ஆள் இல்லை. தேவையில்லாத சத்தங்களைத் தவிர்க்க வேண்டும் என என் மகன்களான யுவன் ஷங்கர் ராஜா, கார்த்திக் ராஜா உட்பட அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். நம் தமிழ் இசை எங்கோ சென்றிருக்க வேண்டும். தமிழிசையின் மகத்துவத்தையும் மேன்மையையும் முழுதும் அறியாதவர்களாக இருக்கின்றோம். கண் முன்னே பொக்கிஷங்கள் இருக்கும்போது அதைப் பயன்படுத்தத் தெரியாதவர்களாக இருக்கிறோம். பாலாறும் தேனாறும் பக்கத்தில் ஓடும்போது மட்டமான இரசனையைத்தான் இன்றைய இரசிகர்கள் நாடுகிறார்கள்.

Soalan ini berbentuk pemahaman petikan genre tokoh muzik. Calon perlu mempunyai kemahiran pemahaman yang baik untuk menjawab soalan berbentuk seperti ini. Calon perlu membaca dan memahami teks secara keseluruhan supaya dapat memberikan jawapan yang cemerlang.

(6) i) தேவையில்லாத இசைகளைத் தவிர்க்க வேண்டுமென்று எதிர்ப்பாக்கிறார்.

ii) தமிழிசையின் மகத்துவத்தையும் மேன்மையையும் முழுதும் ~~அனைவரு~~ அனைவரும் அறிய வேண்டும்.

iii) புதிய சிந்தனையில் அனைவரும் இசைய தேடி வர வேண்டும்.

Jawapan di atas mempamerkan mutu jawapan yang cemerlang. Majoriti calon berjaya memahami dan menaakul isi kandungan teks dengan baik. Oleh yang demikian, hampir keseluruhan calon berjaya menjawab soalan ini dengan betul.

**கேள்விகள் 7 முதல் 10 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை காண்க.*

1 மொழியும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களும் ஓரினத்தை வளர்க்கும் அடிப்படைக் கூறுகளாகும். தொன்மை வாய்ந்த தமிழனத்திற்கு இவ்விரு கூறுகளும் இரு கண்களைப் போன்றவை. இத்தகைய தமிழினத்தில் பிறந்த தமிழ்ப் பெண்களான நாம் எப்படி வாழ்கிறோம்? தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கும் நல்ல தமிழ்ப்பெண்களாய் வாழ்கிறோமா?

2 உடை அணிவது, உணவுப் பழக்கம் முதலிய வாழ்க்கை நெறிகளில் தமிழ்ப்பெண்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்னும் வரையறை உண்டு. ஆனால், இன்றைய நிலையில் இவ்வரையறையைத் தமிழ்ப்பெண்கள் சிலர் கடைப்பிடிப்பதில்லை என்பது மட்டுமல்லாமல் வரையறைகளும் மீறப்படுகின்றன என்பதுதான் உண்மை. இவர்கள் சுயமாகச் சம்பாதிக்கின்றோம் என்ற நினைப்பில் தங்களின் வாழ்க்கையின் வழியையே மாற்றிக்கொள்வதில் முனைப்பாயிருக்கின்றனர்.

3 உடை அணிவதிலும் இன்றைய பெண்கள் தங்கள் பண்பாட்டைச் சீரழிக்கின்றனர். நமது பண்பாட்டு உடையான சேலையை அணியும் பெண்களுள் பெரும்பாலானோர், உடை என்பது உடலை மறைக்கத்தான் என்பதை மறந்துவிடுகின்றனர். தமிழ்ப் பெண்களும் அவர்களின் பண்பாட்டு உடைகளும் இப்படித்தான் போலும் என மற்ற இனத்தவர்கள் **இழிவாகக்** கருதும்படி நடந்து கொள்கின்றனர். தமிழ்ப்பெண்களுள் பெரும்பாலானோர் கோயில், திருமணம் போன்ற பல்வேறு பொது நிகழ்ச்சிகளுக்குச் சேலை அல்லாத பிற உடைகளையே அணிந்து செல்வதைக் கண்கூடாக நாம் காணமுடிகிறது.

4 திரைப்படங்களின் தாக்கத்தினால் இந்நிலைமை மேலும் மோசம் அடைந்துள்ளது என்பது மறுப்பதற்கில்லை. திரைப்படங்களின் பெயரிலேயே பெரும்பாலான சேலைகளும் விற்பனையில் இருக்கின்றன. அதிலும், நடிகைகள் அணியும் உடைகளே இன்று தமிழ்ப்பெண்கள் பெரும்பாலானோரின் உடைகளாகி விட்டன. திரைப்படங்களில் நடிக்கும் நடிகைகள் பணத்துக்காக எப்படியும் உடுத்துவார்கள். ஆனால், இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நெறிமுறைகள் கொண்ட தமிழ்ப்பெண்கள் இவர்களைப் பின்பற்றி அருவருக்கத்தக்க வகையில் ஆடைகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும்.

5 சடைபோடுதல், பூச்சூடுதல், மஞ்சள் பூசுதல், பொட்டு வைத்தல் போன்றவை தமிழ்ப்பெண்களுக்கே உரிய தனி அடையாளங்களாகும். தேவையில்லாமல் இவற்றைச் சிதைத்து விளம்பரங்களுக்கு அடிமையாகி முகத்திற்கு வெண்ணிறச் சாயங்களைப் பூசும் நிலை அதிகம் உருவாகிக்கொண்டு வருகிறது. இது நமது அடிப்படைப் பண்பாட்டுக் கூறுகளையே சின்னாபின்னமாக்கிவிடும் என்பதை உணர வேண்டும்.

6 பெற்றோர்கள் தமிழ்ப்பெண்களுக்குச் சுதந்திரம் கொடுப்பதில்லை என்னும் குற்றச்சாட்டைப் போக்கும் வகையில் இன்று பெரும்பாலான குடும்பங்களில் ஆண்களைப்போல் பெண்களையும் உயர்கல்வி வரை படிக்க வைக்கின்றனர்; சுதந்திரமாகச் செயல்பட விடுகின்றனர். இந்தச் சுதந்திரத்தைத் தக்க வகையில் பயன்படுத்திக் கொள்வதோடு தாங்கள் பிறந்த இனப்பெருமையையும் குடும்பப் பெருமையையும் கட்டிக் காக்கும் வண்ணம் தமிழ்ப்பெண்கள் அரணாக விளங்க வேண்டும்; பண்பாட்டுச் சீரழிவுகளில் சிக்கிச் சிதையாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

– நல்ல தமிழ்ப் பெண்களாய் வாழ்வோம்
(வீர.பூங்குழலி)
[எடுத்தாளப்பட்டது]

## Soalan 7

**7** தமிழ்ப்பெண்களின் பண்பாட்டு அடையாளம் **இரண்டனைக்** குறிப்பிடுக?

Soalan ini berdasarkan teks moden. Kemahiran yang diuji adalah berdasarkan pemahaman calon mengenai ciri-ciri budaya wanita kaum India.

⑦ தமிழ்ப்பெண்களின் பண்பாட்டு ~~அடையாளம்~~ அடையாளங்கள் சடைபோடுவதும் பொட்டு வைப்பதாகும்.

Jawapan calon cemerlang dapat membaca dan memahami teks ini kerana kandungan teks berkaitan dengan pengalaman dan pengetahuan calon sedia ada. Bahasa yang

digunakan dalam teks ini agak mudah difahami. Oleh yang demikian, kebanyakan pelajar berjaya menyatakan dua isi yang dikehendaki oleh soalan.

**Soalan 8**

i) தமிழ்ப்பெண்களிடையே ஏற்படும் பண்பாட்டுச் சீரழிவுக்கான காரணங்கள் யாவை?

Soalan ini memerlukan kemahiran membaca dan mengenali sebab-sebab keruntuhan budaya dalam kalangan wanita India.

8.
i) தமிழ்ப்பெண்களிடையே ஏற்படும் பண்பாட்டுச் சீரழிவுக்கான
காரணங்களில் ஒன்று, பெண்கள் சுயமாகச் சம்பாதிக்கின்றார்கள் என்ற
நினைப்பில் தங்களின் வாழ்க்கையின் வழியையே மாற்றிக்கொள்வதில்
முனைப்பாயிருக்கின்றனர். மேலும், திரைப்படங்களின் தாக்கத்தினால்
தமிழ்ப்பெண்களிடையே பண்பாட்டுச் சீரழிவு ஏற்படுகின்றது.

Contoh jawapan di atas merupakan jawapan yang cemerlang di mana calon berjaya mengenalpasti punca-punca keruntuhan ciri-ciri budaya dalam kalangan wanita India. Bagi calon yang sederhana dan lemah, mereka tidak mampu mengenal pasti secara menyeluruh.

ii) 4 ஆவது பத்தியின் வாயிலாக ஆசிரியர் கூறவரும் கருத்து யாது?

Soalan memerlukan para calon mengenalpasti mesej yang ingin diketengahkan oleh penulis. Majoriti calon dapat menyatakan mesej dengan tepat.

ii) 4 ஆவது பத்தியின் வாயிலாக, ஆசிரியர் கூற வரும் கருத்து
திரைப்படங்களில் நடிக்கும் நடிகைகள் பணத்துக்காக எவ்வளவு
இழிவாக இருந்தாலும், (உடைகளை) அணிவார்கள். ஆனால், ~~நாம் தான்~~
தமிழ்ப்பெண்களாகப் பிறந்துள்ள நாம் தான் சரியான நெறிமுறைகளைக்
கொண்டு அவர்களைப் பின்பற்றாமல் சீரான ஆடைகளை
உடுத்த வேண்டும்.

Contoh jawapan di atas merupakan jawapan yang menepati kehendak soalan kerana calon berjaya memberikan mesej yang ingin disampaikan oleh penulis menerusi sajak ini.

**Soalan 9**

**9** கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் தருக.

தமிழ்ப் பெண்களும் அவர்களின் பண்பாட்டு உடைகளும் இப்படித்தான் போலும் என மற்ற இனத்தவர்கள் **இழிவாகக்** கருதும்படி நடந்து கொள்கின்றனர். (15ஆவது வரி)

Soalan ini berdasarkan pemberian maksud bagi perkataan yang terdapat di dalam teks pemahaman.

(9) கேவலமாகக் , தூற்றத்தக்க வகையில்

Kebanyakan calon berjaya memberikan maksud yang sesuai bagi perkataan yang diberikan dalam petikan. Calon memiliki kemahiran kosa kata yang meluas untuk menjawab soalan ini.

**Soalan 10**

**10** தமிழ்ப்பெண்களின் பண்பாட்டுச் சீரழிவுகள் தொடர்ந்தால் சமுதாயத்திற்கு ஏற்படும் **விளைவுகளை** 50 சொற்களில் எழுதுக.

Soalan ini berdasarkan penghuraian idea sendiri berkenaan tajuk yang diberikan. Calon juga perlu memiliki pengetahuan am yang meluas untuk menjawab soalan ini.

(10) தமிழ்ப்பெண்களின் பண்பாட்டுச் சீரழிவுகள் தொடர்ந்தால
சமுதாயத்திற்கு ஏற்படும் விளைவுகள் என்னவென்றால்
நம் சமுதாயத்தை மற்ற இனத்தவர்கள் தரக்குறைவாகப்
பார்ப்பார்கள். அடுத்து வரும் நமது சமுதாய வாரிசுகளுக்கு
நமது தமிழ்ப்பண்பாடு தெரியாமல் போய் விடும்.
நமது சமுதாயத்தின் அடிப்படையான அடையாளமே
மாறிவிடும். நமது சமுதாயம் அழிவை நோக்கி சென்று
கொண்டிருக்கும். நமது சமுதாய பெண்கள் வழி தவறி
போக வாய்ப்புகள் உண்டு. நமது சமுதாயத்தின் எந்த
ஒரு கருத்துக்களையும் மற்ற இனத்தவர்கள் ஏற்று கொள்ள
மாட்டார்கள். நமது சமுதாயத்தின் சிறப்புகள் மறக்கப்பட்டுவிடும்.

Jawapan di atas mempamerkan mutu jawapan yang cemerlang kerana calon dapat menyenaraikan beberapa kesan akibat keruntuhan ciri-ciri budaya wanita India. Calon dapat menjawab soalan ini dengan baik kerana perkara yang dibincangkan dalam petikan ini sebati dalam kehidupan seharian mereka. Dengan ini, calon telah berjaya mengutarakan kesan negatif sekiranya pengabaian budaya berterusan dalam kalangan wanita India.

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

அவளுடைய அப்பா கருப்பனுக்கு மட்டும், 'பொம்பளப் புள்ள படிச்சு என்னத்தக் கிழிக்கப்போகுது' என்ற நினைப்பு.

முத்தம்மா வெகு நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தாள். சரியாகப் பத்து மணிக்குத் தோட்டத்து மின்சார விளக்குத் துண்டிக்கப்பட்டுவிட்டது. *அரிக்கன்* விளக்கு வெளிச்சத்தில் படிக்க வேண்டிய சூழ்நிலை. இந்தத் *தானா மேரா* தோட்டத்தில்தான் முத்தம்மா பிறந்து வளர்ந்தாள். சஞ்சியில் வந்த அவளது பாட்டனோடு இவள் மூன்றாவது தலைமுறை.

********************************

"இன்னும் ரெண்டே வருஷம்மா.... எப்படியும் எஸ்.டி.பி.எம். எழுதிடுவேன். அப்பாகிட்ட சொல்லிப் படிக்க அனுப்பச் சொல்லுங்கம்மா...!"

"உங்கப்பங்கிட்ட சொல்லி நடக்கப்போறது ஒன்னுமில்ல. எவ்வளவு செலவாகும்னு சொல்லுடி...!" என்றாள் முத்தம்மாவின் அம்மா காமாட்சி.

"பரிட்சைக் காசு மட்டும் இருநூறும்மா. மத்தது மாசம் இருபது முப்பது வரும்மா...!"

"என்னது இருநூறா...! அவ்வளோ காசுக்கு நான் எங்கேடி போவேன்? சரி... யாருகிட்டயாவது கடன உடன பட்டு ஏற்பாடு பண்றேன்...! நீ படிப்ப மட்டும் கவனி...!"

*********************************

ஆண்டுச் சக்கரம் சுழன்றது. முத்தம்மா எஸ்.டி.பி.எம். தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்றுப் பல்கலைக்கழக நுழைவுக்கான கடிதமும் பெற்றாள்.

"ஏம்மா அழுவுறீங்க...?"

"இல்லடி, கஞ்சி குடிச்சிக்கிட்டே இம்புட்டுத் தூரம் திறமையா படிச்சுட்டே! எல்லாரும் என்னென்னவோ சொல்றாங்க. உம் மவ *டாக்டராகப்* போறா, *லாயராகப்* போறான்னு...! எங்கள மறந்துடமாட்டியே தாயி...!"

"இன்னும் நாலே வருஷம். படிப்ப முடிச்சிட்டு வந்து உங்கள ராணி மாதிரி வைச்சிக் காப்பாத்துவேன்மா...!"

*************************************

பல்கலைக்கழகத்தில் பல உயர்ந்த எண்ணங்களோடும் இலட்சியங்களோடும் காலடி எடுத்து வைத்த முத்தம்மாவுக்குச் சாட்டையடியாக அமைந்தது அறிமுக வாரம். கூட்டிலிருந்து விடுபட்ட பறவைகளாகச் சிறகடித்துப் பறந்தனர் பல்கலைக்கழக மாணவர்கள். புதுமையாகவும் புரியாததாகவும் இருந்தது முதல் வாரம். 'அறிமுகப்படலம்' எனும் பெயரில் *சீனியர்* மாணவர்களின் குருட்டுத்தனமான சேட்டைகளும் அட்டகாசங்களும் பொறுக்க முடியவில்லை. அன்று மாலை...

"ஏய்! உன் பேருதான் முத்தம்மாவா?" இது முதலாமவனின் ஆர்வ வினா.

"முத்தம்...ம்...ம்...மா ... *வெரி சுவீட் நேம்*," இன்னொருவனின் நையாண்டி கலந்த பேச்சு.

"என்ன முறைக்கிறே! என்னமோ நீ மட்டுந்தான் படிக்க வந்ததா நெனப்பா! எங்கள ஏறெடுத்தும் பார்க்க மாட்டேங்கிற...!"

"நிறுத்துங்க...! இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாயில்ல? உலகம் வெளியேதான் இருண்டு கிடக்குன்னு நினைச்சேன். **இப்பதான் தெரியுது அது உள்ளேயும் இருண்டுதான் கிடக்குது**. தன்னம்பிக்கையோடு வாழ்ந்த இனம் தரங்கெட்டுப் போக உங்களப்போல உள்ளவங்கதான் காரணம். ஒவ்வோர் இனமும் தன்னை வளப்படுத்திக் கொள்ள எவ்வளவோ செய்யுறாங்க. உள்ளே படிக்க வந்துட்டோம்கிறதால நீங்க தலைகொழுத்துத் திரியுறீங்க. ஒன்னு மட்டும் உண்மை! உங்கள மாதிரி உள்ளவங்க இருக்கிறவரை இந்தச் சமூகம் திருந்தவே போறதில்ல....!"

அதற்கப்புறம் துணிந்து அவளிடம் எவரும் எதிர் நிற்க முடியவில்லை. அப்படியே நான்காண்டுகளையும் தனக்கென ஒரு பாதை அமைத்துக் கொண்டு தானுண்டு தன் படிப்பு உண்டு என்று படிப்பை முடித்தாள் முத்தம்மா. பல்கலைக்கழகம் ஒரு பட்டதாரியை மட்டுமல்ல, பட்டறிவும் சமுதாயப் பற்றும் கொண்ட ஒரு தமிழ்ப் பெண்ணையும் வளர்த்து விட்டதில் பூரித்து நின்றது.

பட்டமளிப்பு விழாவன்று பல்கலைக்கழகத் துணைவேந்தரின் கையால் வாங்கிய சட்டத்துறையின் உயர்தர முதல்நிலைப் பட்டத்தோடு மேடையிலிருந்து கம்பீரமாக இறங்கி வந்தாள் முத்தம்மா.

"மாரியாத்தா...! நான் வேண்டிக்கிட்டபடியே என் கனவ நனவாக்கிட்ட தாயே...!" என்று காமாட்சி தான் வணங்கும் தெய்வத்தை மனத்தில் நினைத்து உருகினாள்; பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"வணக்கம் குமாரி முத்தம்மா! நாங்க மலேசிய வானொலியைச் சேர்ந்தவங்க. சட்டத்துறையின் முதல்நிலை மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்களுக்கு எங்களின் வாழ்த்துகள்! பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் இந்திய மாணவர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்...?"

முத்தம்மா தன் தாயைப் பார்த்தாள். நிமிர்ந்து நின்ற தன் தந்தையையும் பார்த்தாள். தன்னைச் சூழ்ந்துநின்ற *ஜூனியர்* மாணவர்களைப் பார்த்தாள். கணீரெனப் பேசினாள். அவளது குரல் வான்வெளியில் பரவி நின்றது.

**சி.தியாகராஜன்**

(பேரவைக் கதைகள் 3)

[எடுத்தாளப்பட்டது]

**Soalan 11**

**11** கருப்பனைப் பற்றி அறியக்கூடியது யாது?

Soalan ini berbentuk soalan pemahaman cerpen yang diberikan dan majoriti calon dapat mengikuti perkembangan cerpen dengan baik.

11. கருப்பன் பெண்களின் திறமைகளையும் சாதனைகளையும் அறியாதவன்; தெரியாதவன் என்று கூறலாம். மேலும், பெண்களால் எதுவும் முடியாது என்ற சிறுமையான எண்ணம் கொண்டவன் என்று அறியலாம்.

Calon dapat memberikan jawapan yang baik kerana dapat memahami ciri-ciri perwatakan seperti yang dikehendaki oleh soalan.

**Soalan 12(i)**

**12** அ) முத்தம்மா ஆழ்ந்த யோசனையில் இருப்பதற்குக் காரணம் என்ன?

Calon perlu memahami plot dan perkembangan cerita supaya dapat mengenali cabaran yang dihadapi oleh watak dalam soalan ini.

12) அ) முத்தம்மா ஆழ்ந்த யோசனையில் இருப்பதற்கான காரணம் பேரன்
பிள்ளைகள் அதிகமாகப் படிப்பதை வெறுப்பதும் தன் அப்பாவிடம் தான்
இன்னும் இரண்டு வருடத்தில், எஸ்.பி.எம் எழுதிய பிறகு
ஒரு பகுதி அனுபவமும் எப்படி தேவையோ என்பது ஆகும்.

Contoh di atas adalah mutu jawapan yang cemerlang kerana calon dapat mengaplikasikan teknik menjawab secara tepat.

**Soalan 12 (ii)**

ஆ) பல்கலைக்கழக மாணவர்கள் அநாகரிகமாக நடந்துகொள்ள எவை காரணங்களாக இருக்கக்கூடும்?

Calon perlu mempunyai pengetahuan am mengenai senario sosial mahasiswa di institusi pengajian tinggi untuk menjawab soalan ini dengan baik.

ஆ) பல்கலைக்கழக மாணவர்கள் அநாகரிகமாக ~~நட~~ ~~நடந்~~ நடந்துகொள்ள
காரணம் அவர்களின் சுற்றுச்சூழலின் பாதிப்பு, ~~அவ~~ தீய
நண்பர்களின் சகவாசம், அவர்கள் பணக்காரக் குடும்பத்தில் வளர்ந்தவர்கள்
என்ற நினைப்பு, எப்படியோ அவர்களுக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வியைத்
தொடர வாய்ப்புக் கிடைத்து விட்டது என்பதால். மேலும், அவர்களுக்குப்
போதுமான சமயக் கல்வி இல்லாததால்.

Sebilangan besar berjaya menjawab dengan cemerlang kerana mereka telah mengamalkan budaya membaca dan memahami senario semasa dalam kalangan mahasiswa di institusi pengajian tinggi.

**Soalan 13**

**13** கீழ்க்காணும் தொடர் உணர்த்தும் சூழலுக்கு ஏற்ற பொருள் யாது?

**இப்பதான் தெரியுது அது உள்ளேயும் இருண்டுதான் கிடக்குது.**

Soalan ini berdasarkan pemberian maksud tersirat kepada rangkai kata yang diberikan daripada teks cerpen.

13. இப்பதான் தெரியுது அது உள்ளேயும் இருண்டுதான் கிடக்குது என்ற
தொடரில் வெளியுலகம் மட்டுமல்ல பல்கலைக்கழகத்திலும் பல
தேவையில்லா காரியங்களும், பொது அறிவு குன்றியுள்ள மக்களும்
இருக்கின்றனர் என்பது தான் பொருள் ஆகும்.

Sebilangan besar calon gagal memberikan jawapan yang bermutu tinggi kerana tidak dapat mengaitkan maksud tersirat yang terdapat dalam cerpen. Calon juga tidak berjaya menguasai hukum bahasa yang tepat. Perkara ini jelas dalam jawapan calon di atas.

இப்பொழுது தான் தெரிகிறது வெளியுலகில்
உள்ளவர்கள் தாம் கல்வியறிவின்றி சமுதாய
உணர்வு தொடர்பான விழிப்புணர்வின்றி
பொறுப்பில்லாமல் இருக்கிறார்கள் என்றால்
பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களும்
அப்படித்தான் இருக்கின்றனர்.

Calon cemerlang telah berjaya mengenal pasti maksud tersirat dalam rangkai kata yang diberikan dengan jitu dan menggunakan hukum bahasa yang tepat seperti contoh jawapan di atas.

**Soalan 14 (i)**

**14** அ) இச்சிறுகதை சமுதாயத்துக்கு உணர்த்தவரும் **இரண்டு** செய்திகளைக் குறிப்பிடுக?

Soalan ini memerlukan calon mengenal dan memahami mesej yang ingin disampaikan oleh pengarang berdasarkan teks cerpen.

(14) அ. இச்சிறுகதையின் வழி சமுதாயத்திற்கு உணர்த்துவரும்
கருத்து யாதெனில் ஆண் பெண் என்று பாரபட்சமின்றி
அனைவருக்கும் உயர்கல்வியை மேற்கொள்ள அனுமதியும்
வாய்ப்புகளையும் கொடுக்கவேண்டும். மேலும், ஏழ்மையைக்
காரணம் காட்டி உயர்கல்வியைத் தொடராமல்
இருப்பது தப்பாகும். அதுமட்டுமின்றி, எந்தவகைய இடர்கள்
வந்தாலும் அதனைத் துணிந்து நின்று எதிர்கொள்ள
வேண்டும். இறுதியாக, உயர்கல்வியை மேற்கொள்ளும்போது
காரியத்தில் கண்ணாயிருந்து பெற்றோர்களைப் பெருமை
பட செய்ய வேண்டும்.

Jawapan di atas mempamerkan mutu jawapan cemerlang kerana berjaya mengenali mesej secara tepat yang ingin disampaikan oleh pengarang.

**Soalan 14 (ii)**

ஆ) இச்சிறுகதையில் முத்தம்மா என்கிற பாத்திரம் உமக்குள் **ஏற்படுத்திய தாக்கத்தை** விவரித்து எழுதுக.

Soalan di atas memerlukan calon menganalisis dan mengemukakan pendapat sendiri tentang perwatakan dalam cerpen ini. Berikut adalah contoh jawapan yang cemerlang.

ஆ) இச்சிறுகதையில் முத்தம்மா என்கிற பாத்திரம் என்னை வெகுவாகக்
கவர்ந்துள்ளதைக் கூறுவதில் ஐயமில்லை. முதலில், தன்னைக்
கொசுறையாக நினைக்கும் தன் தந்தையின் மத்தியில் கஷ்டப்பட்டு
படித்து, தேர்வில் சிறந்த தேர்ச்சிப் பெற்ற வாழ்வில் உயர்ந்துள்ளார்.
இதில், அவரின் வைராக்கியத்தைக் கண்டு மெய்சிலிர்கின்றேன். மேலும்,
ஏழை மாணவியாக இருந்தும், தன் தாயின் கடன் உதவியோடு
தன் கல்வி துறையை வெற்றி கரமாக முடித்துள்ளார் முத்தம்மா.
இதில் அவரின் விடாமுயற்சியும் தன் பெற்றோர்களின் பால்
பாசத்தையும் வெளி கொணர்கின்றார். இதனைத்தொடர்ந்து, அவரை
ஏளனம் செய்த சீனியர் மாணவர்களிடம் தைரியமாகவும்
துணிச்சலாகவும் எதிர்நோக்கினார் முத்தம்மா. மேலும், தன்
சமுதாயத்தின் பால் மிகுந்த அக்கறை கொண்டவராகத் திகழ்கின்றார்
இக்கதையின் கதாப்பாத்திரமான முத்தம்மா.

Kebanyakkan calon dapat mengolah isi hati mereka setelah menghayati cerpen tersebut.

## Soalan 15

**15** *கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது* **சொந்த மொழிநடையில் விளக்கம்** *எழுதுக.*

**தூக்கம்!**

தூங்காதே தம்பி தூங்காதே - நீ
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!
நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்! - சிலர்
அல்லும் பகலும் தெருக்கல்லாய் இருந்துவிட்டு
அதிர்ஷ்டம் இல்லையென்று அலட்டிக் கொண்டார்
விழித்துக் கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார் - உன்போல்
குறட்டை விட்டோரெல்லாம் கோட்டை விட்டார்

*— பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்*

Calon perlu memahami keseluruhan mesej yang disampaikan oleh penyair. Jawapan berikut mempamerkan mutu jawapan cemerlang kerana calon dapat mengenal pasti dan menghuraikan mesej tersebut dengan tepat.

15. கவிஞர் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் இயற்றிய தூக்கம் எனும்
கவிதையில் அவர் கூறியதாவது, தூங்கி இருக்கும் இளைஞர்களை
தூக்க உறக்கத்திலிருந்து ~~எழுந்த~~ எழும்ப கூறுகின்றார். மேலும், எல்லா
நேரங்களிலும் வீணே தூங்கியவர்கள், தானும் கெட்டதனுடன் நாட்டையும்
கெடுத்தார்கள். அடுத்த வரியில், எந்நேரமும் எந்த வேலையையும்
செய்யாமல் பலன் கிடைக்காத போது அதிர்ஷ்டம் இல்லை என்று
அலட்டியவரும் உண்டு என்று கூறுகிறார். மேலும், சோம்பேறிகளாக
இல்லாமல் உழைத்தவர்கள் எல்லாம் இன்பமாக வாழ்ந்தார்கள் என்று
அவர் கூறுகிறார். சோம்பேறிகளாகவும் ~~எதையும்~~ உழைக்காத
இளைஞர்கள் எல்லாம் பின்னால் அவதியுற்றார்கள் என்றும் கவிஞர்
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ~~கூறுகிறார்~~ கூறினார்.

Kebanyakan calon berjaya memahami keseluruhan mesej yang disampaikan oleh penyajak disebabkan oleh penggunaan bahasa yang mudah difahami. Mesej yang ingin disampaikan oleh penyair juga agak relevan dan berkait rapat dengan kehidupan seharian calon.

## Soalan 16

**16** கொடுக்கப்பட்டுள்ள **உவமைத்தொடரைப்** பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

> மாலுமி இல்லாத கப்பல் போல

Calon dikehendaki mahir dalam mengenali dan memahami maksud '*uvamaithodar'* dengan jelas untuk menjawab soalan ini.

16. அப்பூப்பந்து குழுவின் பயிற்றுநர் மாற்றமடைந்ததால் அக்குழு மாலுமி இல்லாத கப்பல் போல எப்போட்டியையும் எதிர்கொள்ள முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கின்றனர்.

Jawapan di atas merupakan contoh jawapan yang bermutu tinggi. Majoriti calon berjaya membina ayat dengan memperlihatkan maksud '*uvamaithodar'* dengan jelas. Terdapat sebilangan calon membina ayat yang tidak memperlihatkan maksud '*uvamaithodar'* secara tepat.

## Soalan 17

**17** கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்திற்கேற்ற **திருக்குறளை** எழுதுக.

> உலகப் போக்கு எப்படி இருக்கின்றதோ அந்த உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அதைக் கடைப்பிடித்து அவ்வாறு நடப்பதே அறிவாகும்.

Soalan ini memerlukan calon menulis '*thirukkural'* dengan lengkap berasaskan kepada maksud penerangan yang diberikan. Berikut adalah jawapan calon yang cemerlang.

(17) எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு.


Calon yang menghafal '*thirukkural'* dan maknanya dapat menjawab dengan baik. Calon yang sederhana dan lemah, walaupun mengetahui makna '*thirukkural'* gagal menulis *thirukkural* itu secara lengkap.

## Soalan 18

**18** கொடுக்கப்பட்டுள்ள **செய்யுளின்** விளக்கம் எழுதுக.

> மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
> பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் - மின்னிறத்துச்
> செய்யத்தாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
> பொய்கைவாய்ப் போவதே போன்று
>
> – நளவெண்பா

Calon memerlukan pengetahuan yang mendalam mengenai '*Ceyyul*' dan maksudnya yang disarankan untuk menjawab soalan ini. Jawapan di bawah mempamerkan mutu jawapan cemerlang.


18) ~~மகா~~ மன்னர்களின் தாமரை போன்ற கண்கள் அகன்று விரிந்து நோக்க திருமகள் போன்ற தமயந்தி மண்டபத்திற்குள் நுழைகிறாள். மின்னல் நிறம் ஒளிவிடும் அவளது சிவந்த பாதங்கள் வெள்ளை சிறகுகள் உடைய அழகிய அன்னப்பறவை தாமரை மலர்களின் ~~தா~~ தடாகத்தில் செல்வது போல் தமயந்தி சென்றாள்.

Calon cemerlang ini berjaya menghafal '*ceyyul*' dan menghuraikan maksudnya dengan baik. Manakala calon sederhana dan lemah tidak menghafal dan kurang memahami maksud '*ceyyul'* yang telah diberikan. Oleh itu, mereka mengalami kesukaran dalam proses penjelasan semua aspek maksud yang dikehendaki soalan. Jawapan calon hanya meliputi sebahagian daripada jawapan yang tepat. Kesalahan ejaan juga amat ketara dalam penjelasan maksud '*ceyyul'*.

## Soalan 19

**19** *கீழ்க்காணும் பகுதியில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப்* **பொருத்தமான** *மொழியணிகளை எழுதுக.* **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்**.

வாழ்க்கை என்பது வற்றாது ஓடிக்கொண்டிருக்கும் ஒரு ஜீவ நதி போன்றது. தடைகள் எவ்வளவு வந்தாலும் நதிகள் எப்போதுமே முன்னோக்கிச் சென்று கொண்டிருக்குமே தவிர, பின் வாங்கித் திரும்புவதில்லை. அது கடலுடன் கலக்கும் தனது பணியை நிறைவேற்றியே தீருகிறது. அதன் இலட்சியம், நோக்கம் தோற்பது இல்லை; வெற்றியடையும் வரை உறுதியில் தளர்வதும் இல்லை; அதுவரை ஓய்வதும் இல்லை. (I **மரபுத்தொடர்**)

நதியைப் போன்றே மனித வாழ்க்கையும் மகிழ்ச்சியும் துயரமும் நிறைந்தது. நன்மை நடக்கும்போது மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடையும் மனிதன், துன்பமுறும்போது மட்டும் துவண்டு விடுவது ஏன்? இன்பத்தைக் கொண்டாடுவது போலவே துன்பத்தையும் தாங்கிக்கொள்ள வேண்டும். தவிர, துயரம் என்பது நிரந்தரமானது அல்ல; தற்காலிகமானதுதான். (II **இணைமொழி**)

தோல்வியைக் கண்டு மனிதன் துவள வேண்டிய தேவையே இல்லை. ஊக்கத்துக்கு நிகரான செல்வம் உலகில் உண்டா? உயர்வதற்கு ஊக்கம் மட்டுமே போதுமானது. ஊக்கத்தை உடைமையாகக் கொண்டவர்கள் தோல்விகளைச் சவாலாக ஏற்றுக்கொள்வர். அவர்களுக்குத் தோல்விகள் வெற்றியை நோக்கிச் செல்ல உதவும் தடைக்கற்கள் அல்ல; அவை முன்னேற்றத்துக்குக் கொண்டு செல்லும் படிக்கட்டுகள். (III **திருக்குறள்**)

இருப்பினும், குறிக்கோளும் சரியான வழிகாட்டலும் இருந்தால்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்; இறுதியில் வெற்றியின் சிகரத்தை எட்டவும் முடியும். அதற்குத் திட்டமிட்ட முயற்சியும் திடமான எண்ணமும் கடுமையான உழைப்பும் தொடர்ந்து இருக்க வேண்டும். அப்படி இருந்தால் வெற்றி என்னும் கனியைச் சுலபமாகப் பறிக்க முடியும். (IV **பழமொழி**)

Calon perlu mempunyai pengetahuan dan pemahaman dari segi maksud '*moziyanigal'*. Calon perlu mengaplikasikan kemahiran *'moziyanigal'* dengan tepat berdasarkan situasi yang diberikan. Berikut adalah jawapan calon cemerlang.

19) i) கங்கணம் கட்டுதல்

ii) இன்பமும் துன்பமும்

iii) ~~ஊக்~~ உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதிலார்
உடையது உடையரோ மற்று

iv) மனம் உண்டானால் மார்க்கம் உண்டு

Majoriti calon telah memahami situasi yang terdapat dalam petikan tersebut. Mereka dapat meneka dan menulis *'moziyanigal' yang dikehendaki dengan tepat.*

**Soalan 20**

**20** கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) **சேர்த்து எழுதுக:**

கண் + இமை

எட்டு + எட்டு

(ஆ) **இடம்** எத்தனை வகைப்படும்? அவற்றைப் பட்டியலிடுக.

Soalan ini berkaitan dengan penggunaan tatabahasa dalam Bahasa Tamil. Calon harus mahir dalam ciri-ciri tatabahasa secara terperinci untuk menjawab soalan ini. Berikut adalah mutu jawapan cemerலang.

20 அ. கண்ணிமை

எவ்வெட்டு

ஆ. இடம் மூன்று வகைப்படும். அவை தன்னிலை, முன்னிலை மற்றும் படர்க்கை.

Kebanyakan calon berjaya menghafal dan berupaya mengingat kembali hukum–hukum tatabahasa dari segi pengabungan perkataan untuk menjawab bahagian ini dengan tepat.

**Soalan 21 (i)**

**21** கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கீழ்க்காணும் நேர்க்கூற்று வாக்கியத்தை **அயற்கூற்று வாக்கியமாக** மாற்றி எழுதுக.

> ஆசிரியர், "மாணவர்களே, நாளை பள்ளிச் சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்த வாருங்கள்," என்றார்.

Soalan ini memerlukan calon menukar ayat cakap ajuk yang diberikan kepada ayat cakap pindah. Berikut adalah jawapan calon cemerlang.

21) அ) ஆசிரியர் ~~[illegible]~~ மாணவர்களை மறுநாள் பள்ளி ~~சுற்றுப்புறத்தை~~ சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்த வரும்படி கேட்டுக் கொண்டார்.

Majoriti calon termasuk calon cemerlang masih kurang mahir dalam penggunaan unsur 'kaalam' apabila memindahkan ayat cakap ajuk kepada cakap pindah. Segelintir calon sahaja dapat memberi jawapan yang tepat kerana mereka berjaya mengetahui dan meneliti unsur 'kaalam'

## Soalan 21 (ii)

(ஆ) கீழ்க்காணும் செயப்பாட்டு வினை வாக்கியத்தைச் **செய்வினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

> இலக்கியக் குரிசில் மா.இராமையா அவர்களால் நம் மண்ணின் மணம் கமழும் சிறந்த பல சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன.

Soalan ini memerlukan calon menukar ayat bukan transitif yang diberikan kepada ayat transitif.  Berikut adalah jawapan calon cemerlang.

ஆ) இலக்கியக் குரிசில் மா. இராமையா அவர்கள் நம் மண்ணின் மணம் கமழும் சிறந்த பல சிறுகதைகதைகளைப் படைத்துள்ளார்.

Majoriti calon termasuk calon cemerlang masih kurang memahami ciri-ciri ayat transitif dan bukan transitif  Segelintir calon sahaja dapat memberikan jawapan yang tepat kerana mereka dapat mengetahui dan meneliti ciri-ciri ayat tersebut dengan tepat.

## Soalan 22

**22** கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்**.

> தமிழர்கள், வீரமிக்கவர்களாக இருந்ததோடல்லாமல் தான் வளர்க்கும் விலங்குகளுக்கும் வீறம் இருக்கிறது என்பதைக்காட்ட அவற்றை மோதவிட்டு வேடிக்கை பார்த்தனர். பன்டைத் தமிழர்களிடம் இருந்த இந்த உணர்வு சில ஊர்களில் இன்றும் இருப்பதை காணமுடிகிறது. இதற்காக, அவர்கள் ஆடு, கோழி முதலான விலங்குகளைப் போரிடப் பளக்கி வைத்திருக்கின்றனர்.

Calon perlu menguasai aspek hukum bahasa secara keseluruhan seperti kesalahan ejaan dan tanda bacaan untuk menjawab soalan ini.  Berikut adalah jawapan calon cemerlang.

22. வீறம் - வீரம்
பன்டை - பண்டை
பளக்கி - பழக்கி
இருப்பதை காணமுடிகிறது - இருப்பதைக் காணமுடிகிறது
தான் - தாம்

Majoriti calon cemerlang dapat mengenalpasti kesalahan ejaan dan membetulkannya dengan tepat. Namun demikian terdapat segelintir calon yang gagal mengenal pasti kesalahan nahu bahasa dalam perenggan yang diberikan. Faktor kurang membaca dan kurang latihan menjadi punca kelemahan calon dalam proses menjawab soalan bahagian ini dengan tepat.

**SARANAN KEPADA CALON:**

1. Calon perlu memahami kehendak soalan sebelum menjawab soalan.
2. Calon perlu menguasai hukum-hukum bahasa yang disarankan dalam sukatan pelajaran Bahasa Tamil Sekolah Menengah secara teliti.
3. Calon perlu menyemak semula jawapan mereka supaya menepati kehendak soalan.
4. Calon harus membudayakan sikap membaca bahan-bahan ilmiah dalam Bahasa Tamil dalam kehidupan seharian mereka.
5. Calon harus memperbanyakkan latihan pemahaman dan nahu bahasa.
6. Calon harus melatih diri mereka dengan menulis secara kreatif dalam Bahasa Tamil.
7. Calon juga perlu meneliti dan memahami maksud dan tema sajak sebelum memprosakannya.
8. Calon perlu mengelakkan diri mereka daripada menyalin bulat-bulat petikan asal yang diberikan.
9. Calon sepatutnya yakin semasa mengemukakan pendapat sendiri dalam memberikan jawapan kepada soalan yang memerlukan isi tersirat.
10. Calon perlu menggunakan ayat yang lengkap dan gramatis semasa memberikan jawapan mereka.
11. Calon perlu menggunakan penanda wacana yang sesuai untuk memberi kesinambungan antara isi.
12. Calon juga perlu menggunakan kosa kata yang sesuai dan tepat dalam jawapan mereka.
13. Calon juga perlu menitikberatkan ejaan dan tanda bacaan yang betul semasa menulis jawapan mereka.
14. Calon perlu memberi tumpuan yang lebih kepada unsur tatabahasa Bahasa Tamil supaya dapat menjawab soalan-soalan Bahagian D yang memberi penekanan kepada unsur *mozhianigal*.

**SARANAN KEPADA GURU:**

1. Para guru perlu mempelbagaikan bahan bacaan seperti novel, cerpen, sajak dan drama dalam proses pengajaran dan pembelajaran Bahasa Tamil.
2. Guru perlu memperbanyakkan latihan tatabahasa dan berunsur *mozhianigal*.
3. Guru juga perlu menggalakkan para pelajar membaca karya-karya dan artikel-artikel dalam majalah dan surat khabar Bahasa Tamil tempatan.
4. Guru juga perlu meningkatkan pengetahuan dalam teknologi maklumat dan komunikasi (TMK) untuk menjalankan proses Pembelajaran dan Pengajaran secara berkesan.
5. Guru perlu memperbanyakkan latihan pemahaman dan memprosa pelbagai genre sajak.
6. Panitia Bahasa Tamil peringkat Sekolah dengan kerjasama Persatuan Bahasa Tamil peringkat daerah dan negeri perlu menganjurkan aktiviti-aktiviti ko-akademik seperti pertandingan menulis karangan, sajak dan sebagainya yang akan membantu calon secara tidak langsung untuk menguasai Bahasa Tamil secara keseluruhan.
7. Guru harus peka dan bersedia mengikuti arus perkembangan isu-isu semasa supaya mereka ini bersedia berhadapan dengan para pelajar dengan yakin.